முருகப்பெருமான் துணை

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

08.10.2021, வெள்ளிக்கிழமை

1. காக்கும் ஞான குருவே வாழ்க
கந்த வேலனின் வடிவே வாழ்க
ஆக்கம் தந்து உலகமக்களுக்கு
அழியாமை தரும் அரங்கனே வாழ்க
2. வாழ்கயெனக் கூறி துல்லிய ஆசி
வழங்குவேன் பாம்பாட்டிச் சித்தரும்
தாழ்விலா பிலவ தரிவை திங்கள்
தக்க இருபானீர் திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 22ம் நாள், 08.10.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் உலகநலமுற உரைப்பேன்
வள்ளல் நெறி காட்டி அருளும்
ஆறுமுக அரங்கன் கரம்பட
ஆசிதீட்சை பெறும் மக்களுக்கு
4. மக்களுக்கு வினை நீக்கமுடன்
மனபலம் பொறிபுலன் திடமும்
தேக்கமான நிலைகள் அனுகா
தேற்றமும் நல்ல மாற்றமும் கிட்டும்
5. கிட்டவே தேக பலம் கூடியும்
கிருமி பிணி வழித் துன்பமிலா
கட்டமிலா நெடிய ஆயுளும்
கண்டமிலா வாழ்வும் கண்டு
6. கண்டுமே தேவைக்கு ஏற்ற
கருணைபட பொருள் வளமும்
தொண்டு தேட்டு பலமும் கூடி
தேசிகன் அருள்பட சிறப்பாய் வாழ்வர்
7. வாழ்வினில் அரங்க மகானின்
வல்லமையான சீடர்களாகி
ஊழ் அறுக்கும் வரம் பெற்றிட
உலகை மாற்றும் வண்ணம்
8. வண்ணமுடன் சக்திமிக்கவர்களாகி
வளர்ச்சிதரும் தருமம் கூட்டி
மண்ணுலகை தரும லோகமாக்கி
மக்களை காக்கும் தலைமைகளை

9. தலைமைகளை தேர்வு செய்யும்
தகுதி மிக்கவர்களாக உயர்ந்து
பிழைநேரா ஞான ஆட்சியை
பேருலகம் கண்டடையும் படிச் செய்து

10. செய்துமே அரங்கன் படைகள்
சிறப்பறிவு கொண்டநல்ல
மெய்ஞானவான்களாகச் சிறந்து
மகான் அரங்கன் வழி ஞானிகள் ஆவர்

11. அவனிகாக்கும் அவதார ஞானி
அரங்கனே கலியுகத்தினில்
புவனம் போற்றும் சிறந்த ஞானி
புண்ணிய வழிகாட்டும் உயர்ஞானி
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–